மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை 2019

| | | |
|---|---|---|
| தரம் – 10 | நாடகமும் அரங்கியலும் I | நேரம் - 3 மணித்தியாலங்கள் |

சுட்டெண் ……………………………………

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. ஆற்றுகைக் கலையின் தனித்துவமான அம்சம்
   1. உயிரோட்டமானது 2.மாற்றமடையாதது 3.செவிப்புலக்கலை 4. கட்புலக்கலை

2. பாத்திரத் தெரிவை மேற்கொள்பவர்
   1. நாடகாசிரியர் 2. நெறியாளர் 3. தயாரிப்பாளர் 4. முகாமையாளர்

3. நாடகம் ஒன்றின் முதன்மைப் படைப்பாளி
   1. நெறியாளர் 2. தயாரிப்பாளர் 3. நடிகர் 4. பார்வையாளர்

4. கதைக்கும் நாடகத்திற்கும் இடையேயான வேறுபாடு
   1. கதை 2. கரு 3. பாத்திரம் 4. நேரடித்தொடர்பு

5. நாடகம் எனும் கலை வடிவம்
   1. பொம்மலாட்டத்திலிருந்து தோன்றியது. 2. சடங்கிலிருந்து தோன்றியது.
   3. நாட்டியத்தில் இருந்து தோன்றியது. 4. நிழலாட்டத்தில் இருந்து தோன்றியது.

6. அரங்கு என்ற சொல்லின் பொருள்
   1. ஓர் உயரமான இடம் 2. கூத்து நடைபெறும் இடம்
   3. நிகழ்வுகள் நடைபெறும் இடம் 4. திறந்த வெளிகளில் காணப்படுவது

7. வாய் மொழியைப் பயன்படுத்தாது நடிக்கப்படுவது
   1. புத்தாக்கம் 2. கூத்து 3. ஊமம் 4. போலச்செய்தல்

8. கூத்து எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது
   1. ஆட்டம் 2. பாடல் 3. இசை 4. உரையாடல்

9. ஈழத்தில் சிறுவர் நாடக முன்னோடியாக விளங்குபவர்
   1. நா.சுந்தரலிங்கம் 2. குழந்தை.ம.சண்முகலிங்கம்
   3. க.சிதம்பரநாதன் 4. சொக்கலிங்கம்

10. நாடகத்தின் பிரதான மூலகமாக கொள்ள முடியாதது
    1. நடிகன் 2. ஒளி 3. பார்வையாளர் 4. அரங்கவெளி

11. நாடகம் ஒன்றின் பண்பு அல்லாதது
   1. கணப்பிரசன்னமானது   2. கண்களால் மாத்திரம் பார்க்ககூடியது
   3. ஒரு கூட்டு கலையாகும்   4. ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித்தொடர்பு காணப்படும்

12. பின்வருவனவற்றில் ஆற்றுகை கலை அல்லாதது
   1. நாடகம்   2. நாட்டியம்   3. இசை   4. ஓவியம்

13. இலக்கியம் என்பது ஓர்
   1. ஆற்றுகைக்கலை   2. குழைமைக்கலை   3. மனவெளிக்கலை   4. பயன்கலை

14. வானொலி நாடகம் பற்றி தவறான கூற்று
   1. கேட்டல் வழியாக மட்டும் பெறப்படும்.
   2. ரசிகரின் மனமே அரங்க வெளியாகும்.
   3. முகபாவங்களும் முக்கியம் பெறும்.
   4. குரல் வெளிப்பாடே முதன்மை பெறும்.

15. நடிகன் ஒருவனுக்கு மிக அவசியமான பண்பு
   1. விருப்பமும் ஆர்வமும்   2. பாடும்திறன்
   3. முக வசியம்   4. ஒத்திசையும் தன்மை

16. உடல் உற்சாகத்திற்காக விளையாடக் கூடிய அரங்க விளையாட்டு
   1. பஸ்   2. ஆடும் வீடும்
   3. கரடியும் கிராமமக்களும்   4. குருட்டு ஆட்டோ

17. கட்டியக்காரன் தோன்றும் கலை வடிவம்
   1. கூத்து   2. இசை நாடகம்   3. நவீன நாடகம்   4. சிறுவர் நாடகம்

18. வேட உடைகளை அணிந்து ஒப்பனையிட்டு இறுதியாக மேற்கொள்ளும் ஒத்திசை
   1. வாசிப்பு ஒத்திசை   2. மனை ஒத்திசை
   3. தொழிநுட்ப ஒத்திசை   4. வெள்ளுடுப்பு ஒத்திசை

19. ஆரொடு நோகேன் நாடகத்தில் இடம்பெறும் பாடல் வரிகள் எத்திரைப்படத்தில் உள்ளது
   1. சின்னத்தம்பி   2. மனிதன்   3. கிழக்கு வாசல்   4. தாய் வீடு

20. நாடகத்தின் பிரதான அம்சமாக அமைவது
   1. முரண்   2. மேடை   3. எழுத்துரு   4. சொல்லாடல்

21. ஸ்பெசல் நாடகங்கள் ஆடப்பட்ட அரங்கவெளி
   1. களரி   2. கொட்டகை   3. கோவில்முன்றல்   4. சுமதரை

22. சிங்கள கலை வடிவமான சொக்கரி ஆற்றுகை செய்யப்படும் அரங்கு
   1. வட்டக்களரி   2. களத்துமேடு   3. கரளிய   4. கொட்டகை

23. ஆரொடு நோகேன் என்ற நாடகத்தினை எழுதியவர்
   1. து.உருத்திரமூர்த்தி   2. சி.மௌனகுரு   3. நா.சுந்தரலிங்கம்   4. ம.சண்முகலிங்கம்

24. ஆரொடு நோகேன் நாடகம் ஒரு
   1. சிறுவர்நாகடம்   2. பாடசாலைநாடகம்   3. நகைச்சுவைநாடகம்   4. நடனநாடகம்

25. புதிதளித்தல் ஒன்றில் ஈடுபடுவோருக்கு அவசியமான திறன்
   1. பாடும் திறன்
   2. ஆடும் திறன்
   3. பொருள் சேகரிக்கும் திறன்
   4. கற்பனைத் திறன்

26. நால்வகை அபிநயம் பற்றி கூறும் நூல்
   1. நாட்டிய சாஸ்திரம்
   2. கவிதையியல்
   3. அரங்கு ஓர் அறிமுகம்
   4. சிலப்பதிகாரம்

27. உடல் மொழியுடன் தொடர்புடைய அபிநயம்
   1.ஆங்கியஅபிநயம்
   2. ஆகார்யஅபிநயம்
   3. வார்ச்சிகஅபிநயம்
   4. சாத்வீகஅபிநயம்

28. அரங்கில் ஒளியின் செறிவை கூட்டிக் குறைக்கப் பயன்படுத்தப்படும் கருவி
   1. அடித்தள விளக்கு
   2. வர்ணச்சக்கரம்
   3. மங்கலாக்கி
   4. கீற்றொளி

29. கூத்தில் மாத்துப் பூசுதல் என்பது
   1. மேடையை அலங்கரித்தல்
   2. திரை பிடித்தல்
   3. ஒப்பனை செய்தல்
   4. பாத்திரம் ஏற்றல்

30. சோகமான உணர்வை வெளிப்படுத்தும் வாத்தியங்கள்
   1. வயலின், பறை
   2. வயலின், வீணை
   3. உடுக்கு, பறை
   4. வீணை, மேளம்

31. இசை நாடகத்தில் ஹார்மோனியம் வாசித்து சிறப்பு பெற்ற இந்திய கலைஞர்
   1. எஸ்.வடிவேலு
   2. பிலிப்பு
   3. காதர் பாச்சா
   4. V.V.வைரமுத்து

32. இசை நாடக வருகையுடன் அறிமுகமானது
   1. ஒப்பனை
   2. சுழலும் அரங்கு
   3. காட்சித்திரைகள்
   4. வட்டக்களரி

33. தமிழ் இசை நாடக மரபின் முன்னோடி
   1. சங்கரதாஸ் சுவாமி
   2. பம்மல் சம்பந்த முதலியார்
   3. மங்கை
   4. வேலு சரவணன்

34. இசை நாடகமாக அமைவது
   1. சங்காரம்
   2. வள்ளி திருமணம்
   3. கோடை
   4. இராவணேசன்

35. அருகில் உள்ள படம் சுட்டும் நாடகவியலாளர்
   1. கா.சிவத்தம்பி
   2. சி.மௌனகுரு
   3. க.ஜெயசங்கர்
   4. ம.சண்முகலிங்கம்



36. அருகில் உள்ள படம் சுட்டும் நாடக வகை
   1. கூத்து
   2. சிறுவர் நாடகம்
   3. இசை நாடகம்
   4. நவீன நாடகம்



37. படத்தில் காணப்படும் அரங்கவெளி




1. வட்டக்களரி
2. படச்சட்டமேடை
3. களத்துமேடு
4. களரிய

38. படத்தில் காணப்படும் இசை வாத்தியம்



1. உடுக்கு
2. தவில்
3. தப்பு
4. மிருதங்கம்

39. படத்தில் காணப்படும் உணர்வு நிலை



1. கோபம்
2. பயம்
3. வியப்பு
4. நகைச்சுவை

40. படத்தில் காட்டப்படும் பொருள்



1. மேடைப்பொருள்
2. கைப்பொருள்
3. ஒப்பனைப்பொருள்
4. காட்சிப்பொருள்

40x1 = 40 புள்ளிகள்)

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

தரம் – 10

நாடகமும் அரங்கியலும் 11

நேரம் - 3 மணித்தியாலங்கள்

சுட்டெண் ..........................................

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1. நாடகம் எனும் கலை வடிவம் போலச் செய்தலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது எனக் கூறியவர் யார்?
2. இலங்கையில் பறைமேளக் கூத்து பிரதானமாக ஆடப்படும் இடம் யாது?
3. "ஈழத்து இசை நாடக வரலாறு" எனும் நூலின் ஆசிரியர் யார்?
4. தோணி எனும் சிறுகதையை எழுதியவர் யார்?
5. நடிகர் தெரிவு முறையில் திறந்த தெரிவு என்பது யாது?
6. ஒயிலாட்டம் ஆடப்படுவதன் நோக்கம் யாது?
7. மன்னாருக்குரிய தனித்துவமான நாடக வடிவம் ஒன்று தருக.
8. நாடகத்தின் அருவ மூலகம் எனப்படுவது யாது?
9. ஆரொடு நோகேன் நாடகம் எங்கே? எத்தனையாம் ஆண்டு மேடையேற்றப்பட்டது?
10. பின்வரும் நாடக வகைக்கு பொருத்தமான நாடகம் ஒவ்வொன்று தருக.

    I. சிறுவர் நாடகம்
    II. பாடசாலை நாடகம்
    III. இசை நாடகம்
    IV. நவீன நாடகம்

(12புள்ளிகள்)

**02.**

1. நாடகத்தின் சிறப்பியல்புகள் 4 தருக.
2. நாடகத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் யாது?
3. நாடகப் பண்புடைய சிங்களச் சடங்கு ஒன்றினை குறிப்பிட்டு அதன் ஆற்றுகை நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

(4+4+4 = 12புள்ளி)

**03.**

1. அரங்கவெளி என்றால் என்ன? அரங்கவெளிகள் நான்கினைக் குறிப்பிடுக.
2. அரங்கவெளியின் தனித்துவமான பண்புகள் எவை?
3. பட்டச்சட்ட மேடையில் காணப்படும் உட்கட்டுமானங்கள் நான்கு தருக.

(4+4+4 = 12புள்ளி)

**04.**

1. புதிதளித்தல் என்றால் என்ன?
2. புதிதளித்தல் மூலம் பெற்றுக் கொள்ளும் திறன்கள் எவை?
3. பாத்திரத்தின் பௌதீகவியல், உளவியல், சமூகவியல் பண்புகளை எவ்வாறு இனங்காண்பீர்?

(2+4+6 = 12புள்ளி)

**05.**

1. ஆரொடு நோகேன் நாடகத்தின் கரு யாது?
2. அதில் பயன்படுத்தப்படும் மேடைப்பொருள், கைப்பொருள்களைப் பட்டியல் இடுக.
3. மூன்றாவது குடும்பத்தின் பாத்திரங்களையும் அவர்களின் பண்புகள் ஒவ்வொன்று கூறுக.

(2+4+6 = 12புள்ளி)

**06.**

1. இலங்கையில் இசை நாடகம் மேடையேற்றப்பட்ட இடங்களைத் தருக.
2. இசை நாடகத்தின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
3. பின்வருவோரில் இருவர் பற்றி சிறுகுறிப்பு வரைக.

   I. V.V. வைரமுத்து

   II. M.V. கிருஸ்ணாழ்வார்

   III. செல்வரத்தினம் (செல்வம்)

   IV. பொன்னாலை கிருஸ்ணன்

V. (2+4+6 = 12புள்ளி)

**07.**

1. கூத்து ஆடப்படும் பிரதேசங்களை பட்டியல் இடுக.
2. கூத்தின் கட்டமைப்பினை குறிப்பிடுக.
3. கூத்து ஒன்றின் ஆற்றுகைப் பண்புகள் நான்கு தருக.

(4+4+4 = 12புள்ளி)